# புகை-அற்ற ஒன்டேரியோ சட்டம் 2005
## எவ்வாறு இச்சட்டம் பாதிக்கிறது : பகல் நேர இளஞ்சிறார்கள் இல்லம் மற்றும் தனியார் பகல் நேர காப்பகம்

## அடிப்படைகள்

- புகை-அற்ற ஒன்டேரியோ சட்டம் (SFOA) மே 31, 2006 அன்று அமலுக்கு வருகிறது.
- இச்சட்டம் ஒன்டேரியோவின் தொழிலாளர்களையும், பொது மக்களையும் மறைமுகப் புகையின் (Second-hand smoke) இடர்களிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு, உள்ளடக்கப்பட்ட வேலையிடங்கள் மற்றும் உள்ளடக்கப்பட்ட பொது இடங்களில் புகை பிடித்தலை தடை செய்கிறது.

## பகல் நேர இளஞ்சிறார்கள் இல்லம் மற்றும் தனியார் பகல் நேர காப்பகம்

பகல் நேர இளஞ்சிறார்கள் இல்ல சட்டத்தின் கீழ் உரிமம் பெற்ற ஒரு பகல் நேர இளஞ்சிறார் இல்லத்தில், புகை பிடித்தல் தடை செய்யப்பட்டுள்ளது. மேலும், பகல் நேர இளஞ்சிறார்கள் இல்ல சட்டத்தின் கீழ் தனியார் பகல் நேர காப்பக வசதி வழங்கப்படுகையில், இங்கு குழந்தைகள் இருந்தாலும், இல்லாவிட்டாலும், அவ்வளாகம் முழுவதும் புகை-அற்று எந்நேரமும் இருப்பது அவசியமாகும்.

உரிமம் பெற்ற தனியார் வீட்டில் அமைன்துள்ள பகல் நேர காப்பகம் என்பது, குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் சேவை அமைச்சகத்தால் தனியார்-பகல் நேர காப்பகத்துக்கு வழங்கப்படும் உரிமத்தின் கீழ், தனியார் மனையில் அளிக்கப் படும் பகல் நேர கவனிப்பாகும். தனியார் பகல் நேர பராமரிப்பு ஏஜென்சி பத்து வயதுக்கு உட்பட்ட ஐந்து அல்லது அதற்கும் குறைவான குழந்தைகளுக்கு, அவற்றின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் இல்லம் அல்லாமல், ஒரு தனியார் வீட்டில், ஒன்றுக்கும் மேற்பட்ட தனியார் வீடுகளில், தனியார் பகல் நேர பராமரிப்பை வழங்குகிறது. இந்த இல்லங்களை ஏஜென்சியே மேற்பார்வை இடுவதுடன், கண்காணிக்கவும். செய்கிறது.

கூடுதல் தகவல்களுக்கென, குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் சேவை அமைச்சக வலையகத்திற்கு www.children.gov.on.ca என்ற முகவரியில் வருகை தாருங்கள்.

## இயக்குபவர்களின் கடமைப் பொறுப்புக்கள்

- புகை பிடித்தல் தடை செய்யப்பட்டுள்ளது என அனைவரும் அறிந்துள்ளதை உறுதிபடுத்த வேண்டும்.
- சாம்பல் கிண்ணங்களையும் மற்றும் சாம்பல் கிண்ணங்களாக உபயோகிக்கப்படுபவற்றையும் அப்புறப்படுத்த வேண்டும்.
- இவ்விடங்களில் எவரும் புகை பிடிக்காமலிருப்பதை உறுதி படுத்த வேண்டும்.
- இவ்விதிகளை பின்பற்றாதவர்கள் அவ்விடங்களிளிருந்து தங்காமல் வெளியேருவதை உறுதிபடுத்துங்கள்.
- *நோ ஸ்மோகிங்(புகை பிடிக்கக்கூடாது)* குறிகளை அனைத்து நுழைவு வாயில்கள், வெளியேறும் வழிகள், கழிப்பிடங்கள் மற்றும் மற்ற பிற பொருத்தமான இடங்களில், புகை பிடித்தல் தடை செய்யப்பட்டுள்ளதை அனைவரும் அறியும் வண்ணம் ஒட்டி வைக்கவும். தேவையான அடையாளக் குறிகளைப் பெறுவது குறித்த தகவலுக்கென, தயவுசெய்து உங்கள் உள்ளூர் அரசு சுகாதாரப் பிரிவைத் தொடர்பு கொள்ளவும்.

## அமலாக்கம்

இச்சட்டத்தை அமல்படுத்தும் பொருட்டு, பகல் நேர குழந்தைகள் காப்பகத்திலும், உரிமம் பெற்ற தனியார் பகல் நேர இல்ல கவனிப்பு வழங்கப்படும் இடங்களிலும் உள்ளூர் அரசு சுகாதாரப் பிரிவுகள் சோதனைகளை மேற்கொள்வதுடன், குற்றச் சாட்டுக்களையும் விசாரிக்கும்.

## அபராதங்கள்

சட்டத்தின் இப்பிரிவை மீறுபவர்களுக்கு விதிக்கப்படக்கூடிய உயர்ந்தபட்ச கார்ப்பரேட் (கம்பனிகளுக்கென) அபராதம் பட்டியலிடப்படவில்லை. அதாவது அபராதத் தொகையை நிர்ணயிப்பது அமைதி பேணும் நடுவரின் (Justice of the peace) பொறுப்பாகும். தனி மனிதர் ஒருவருக்கு உயர்ந்தபட்சம் $5,000 அபராதமாக விதிக்கப்படக்கூடும்.

இந்த தகவல் தாளை ஒரு விரைவு நோக்கீட்டு உபயோகத்திற்கென மட்டுமே பயன் படுத்த பரிந்துரைக்கப் படுகிறது. கூடுதல் தகவலுக்கென, தயவு செய்து உங்கள் உள்ளூர் அரசு சுகாதாரப் பிரிவைத் தொடர்பு கொள்ளவும்.

கட்டணமற்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டும் நீங்கள் தகவல் பெறலாம்.

- **INFOline** 1-866-396-1760
- **TTY** 1-800-387-5559

வேலை நேரம் : திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை.

புகை அற்ற ஒன்டேரியோ சட்டம் பற்றிய கூடுதல் தகவலுக்கென, தயவு செய்து சுகாதார முன்னேற்றத்திற்கான ஒன்டேரியோ அமைச்சக வலையகத்திற்கு வருகை தாருங்கள்: http://www.mhp.gov.on.ca/english/health/smoke_free/legislation.asp.

மே 2006



Ontario